முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2022 யூலை

## (303) நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும்

(Financial Controls & Audit)

2022-08-20
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (**தயவுசெய்து கவனமாக வாசிக்கவும்**):**

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 08
வினாக்கள் : 09

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் ஏதேனும் எடுகோள்களை மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

காய்கறிகளைப் பயிரிட்டு, விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ள **வரையறுக்கப்பட்ட அக்ரோ லைவ் (தனியார்) கம்பனி**யின் முக்கிய வணிக நடவடிக்கைகள் மீது, வெளிப்புற சூழல் காரணிகளில் ஏற்பட்ட சமீபத்திய மாற்றங்களின் தாக்கங்கள கீழே காட்டப்பட்டுள்ளன :

(1) நாட்டிற்கு இரசாயன உர இறக்குமதியை தடை செய்வதற்கு அரசாங்கம் எடுத்த கொள்கைத் தீர்மானம் காரணமாக இரசாயன உர வணிகத்தின் இறக்குமதி மற்றும் விநியோகம் நிறுத்தப்பட்டது.

(2) நாட்டில் கார்போனிக் இரசாயனத்திற்கான கேள்வி அதிகரித்திருந்தது. இருப்பினும், நாட்டில் அமெரிக்க டொலரின் (USD) பற்றாக்குறை காரணமாக போதுமான அளவு இறக்குமதியை மேற்கொள்ள முடியவில்லை.

(3) பல வாடிக்கையாளர்கள் உடல் நலத்தில் அக்கறை கொண்டவர்களாக இருப்பதாலும் அதிக விலையாக இருந்தபோதும் சேதன உணவுகளையே கோருவதாலும் கார்போனிக் காய்கறிகளைப் பயிரிட்டு, விற்பனை செய்வது மிகவும் இலாபகரமானதாக இருக்கிறது.

(4) பொருள்களுக்கான கோரிக்கைகளை விடுக்கும்போது (ஓடர் செய்யும்போது) நிகழ்நிலைத் (ஒன்லைன்) தளங்கள் வாடிக்கையாளர்களிடையே பிரபலமாகியுள்ளன.

(5) காலநிலை மாற்றமானது விவசாயத் தொழில்துறையை மோசமாகப் பாதிக்கிறது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

வெளிப்புற சூழல் காரணிகள் / சக்திகளுக்கான (PESTEL), **வரையறுக்கப்பட்ட அக்ரோ லைவ் (தனியார்) கம்பனியின்** மேற்படி காரணிகளின் தாக்கத்தை **மதிப்பிடுக.** (05 புள்ளிகள்)

## வினா 02

இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகம் என்பது ஒரு நிறுவனத்திற்குச் சாத்தியமான அச்சுறுத்தல்களை இனங்காண்பதற்கும் அத்தகைய இடர்களின் தாக்கத்தை நீக்குவதற்கான அல்லது குறைப்பதற்கான மூலோபாயத்தை வரையறுப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்ற கட்டமைக்கப்பட்ட செயன்முறையாகும். தகவல் தொழினுட்பத்தின் பரிணாம வளர்ச்சியானது ஒரு வணிக நிறுவனத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் செல்வாக்குச் செலுத்தியிருக்கிறது. தற்காலச் சூழலில், தகவல் தொழினுட்பமானது இடரை இனங்காண்பதிலிருந்து தொடங்கி கண்காணிப்புடன் முடிவடையும் செயன்முறைகளின் தன்னியக்கத்திற்கு வசதியளிக்கிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகமொன்றைப் பயன்படுத்துவதன் மூன்று (03) நன்மைகளை / வாய்ப்புகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) தகவல் தொழினுட்பத்துடன் தொடர்புபட்ட இரண்டு (02) இடர் முகாமைத்துவக் கருவிகளை (tools) **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட XY (தனியார்) கம்பனியின்** (கம்பனி) பணிப்பாளர்கள் சபையானது, SME களுக்கான SLFRS இற்கு இணங்கத் தயாரிக்கப்பட்ட 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் நிதிக் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்வதற்கு, பட்டயக் கணக்காளர் நிறுவனமான **தேவகா அசோசியேட்ஸை** நியமித்துள்ளது. **தேவகா அசோசியேட்ஸ்** இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வை மேற்கொள்வதுடன் கணக்காய்வு அறிக்கையை 2022 மே 25 ஆம் திகதிக்குள் தமது அபிப்பிராயங்களுடன் வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) "உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல் (Assurance Engagement)" என்னும் பதத்தை **வரைவிலக்கணப்படுத்துக.** (02 புள்ளிகள்)

(b) மேற்படி ஈடுபடுத்தலுடன் தொடர்புடைய உறுதிப்பாட்டு ஈடுபடுத்தலின் மூன்று (03) பிரதான கூறுகளை (key elements) **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

ஒரு கணக்காய்வு நிறுவனம், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உள்ளடக்கிய தரக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை நிறுவி, பராமரித்தல் வேண்டும். சேவைநாடுநர் (client) தொடர்புகளை ஏற்றுக்கொள்ளுதலும் தொடர்தலும் (Acceptance & continuation) மற்றும் கண்காணிப்பு (monitoring) என்பன தரக் கட்டுப்பாட்டு முறைமையொன்றின் இரண்டு கூறுகளாகும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) சேவைநாடுநர் தொடர்புகளை ஏற்றுக்கொள்வதற்கும் தொடர்வதற்கும் ஒரு கணக்காய்வு நிறுவனம் நடைமுறைப்படுத்த வேண்டிய இரண்டு (02) தேவைப்பாடுகளைக் (requirements) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) கண்காணிப்பின் கீழ் உள்ளடக்கப்படும் இரண்டு (02) செயல்பாடுகளை (activities) **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

### வினா 05

2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **ABC குழும பி.எல்.சி.** இன் கணக்காய்வுக்குப் பொறுப்பான சிரேஷ்ட கணக்காய்வாளர் நீங்களாவீர்கள். இக்குழுமம் ஐந்து உள்நாட்டு துணை நிறுவனங்களையும் ஒரு கூட்டு முயற்சி நிறுவனத்தையும் கொண்டிருக்கிறது. உள்நாட்டுத் துணை நிறுவனங்களில் ஒன்று இந்த ஆண்டில் கையகப்படுத்தப்பட்டதாகும். குழுமத்திலுள்ள நிறுவனங்கள் நுகர்வுப் பொருள்களின் தயாரிப்பு, சில்லறை விற்பனை, பொழுதுபோக்கு அம்சங்கள், வீட்டு மனை வியாபார அபிவிருத்திகள், முதலீடு மற்றும் நிதியிடல் உள்ளிட்ட பல்வேறு வகையான வணிக நடவடிக்கைகளில் செயல்படுகின்றன.

குழுமத்திலுள்ள பெரும்பாலான கம்பனிகள், தங்களது வழக்கமான வணிகத்தில் ஒருவருக்கொருவர் பரிமாற்றத்தில் ஈடுபடுகின்றனர். குழுமத்தின் சகல நிதியிடல் மற்றும் முதலீட்டுச் செயல்பாடுகளும் தாய்க் கம்பனியினால் கையாளப்படுகின்றன.

ஆரம்ப அணிக் கலந்தாய்வில், கணக்காய்வு அணியினர் உறவுமுறைத் தரப்பு கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் வெளிப்படுத்துகைகளில் கூடிய கவனம் செலுத்த வேண்டுமெனவும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகள் சேகரிக்கப்படுவதை உறுதிசெய்ய வேண்டுமெனவும் ஈடுபடுத்தல் பங்காளர் வலியுறுத்தியுள்ளார். புதிதாக இணைந்துகொண்ட அணி அங்கத்தவர், ஈடுபடுத்தல் பங்காளரின் மேற்படி செய்தியைப் புரிந்துகொள்ள உங்களது உதவியை நாடியுள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) கணக்காய்வுச் சான்றுகளின் போதுமான மற்றும் பொருத்தமானதன்மை என்பதால் கருதப்படுவது யாதென **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(b) பொருண்மை பிறழ்கூற்று இடருக்கும் கணக்காய்வுச் சான்றுகளின் போதுமான மற்றும் பொருத்தமான தன்மைக்கும் இடையிலான தொடர்பினை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(c) உறவுமுறைத் தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் **ABC குழும பி.எல்.சி.** யின் கணக்காய்வு ஈடுபடுத்தல் அணி மேற்கொள்ளக்கூடிய நான்கு (04) கணக்காய்வு நடைமுறைகளை (audit procedures) **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 06

**ஹிமாலி** தனது மட்டம் III தொழில்சார் பரீட்சையைப் பூரணப்படுத்தியதன் பின்னர் கணக்காய்வு நிறுவனமொன்றில் இணைந்துள்ளார். கணக்காய்வு நிறுவனத்தின் பயிற்சிப் பிரிவினால் புதிதாக வந்தவர்களுக்கு திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டமொன்று (orientation program) நடத்தப்பட்டதுடன் பயிற்சி நோக்கங்களுக்காக சில மாதிரி கணக்காய்வு பணித் தாள்களையும் கணக்காய்வு அறிக்கைகளையும் பார்வையிடுவதற்கான வாய்ப்பு **ஹிமாலிக்கு** வழங்கப்பட்டது. அவர், கணக்காய்வாளரின் அறிக்கையொன்றில் ''வலியுறுத்தல் விடயம் (Emphasis of Matter)'' என்ற பந்தியொன்று இருப்பதை அவதானித்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) கணக்காய்வாளர் அறிக்கையின் நான்கு (04) கூறுகளை (elements) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) கணக்காய்வாளரின் அறிக்கையில் உள்ளடக்கப்படுகின்ற ''வலியுறுத்தல் விடயப் பந்தி'' என்பதால் கருதப்படுவது யாதென **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(c) நிதிக் கூற்றுக்கள் தொடர்பான தனது அறிக்கையில் கணக்காய்வாளர் பாதகமான அபிப்பிராயமொன்றை வெளிப்படுத்துகின்ற ஒரு சந்தர்ப்பத்தை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமான **PTS அசோசியேற்றின்** ஒரு சிரேஷ்ட கணக்காய்வாளர் நீங்களாவீர்கள். தற்போது **வரையறுக்கப்பட்ட ஜயசேன (தனியார்) கம்பனியின் (JPL)** கணக்காய்வில் இந்நிறுவனம் ஈடுபடுகிறது.

நிறுவனத்தின் சிரேஷ்ட பங்காளரான **திரு. பீட்டர்சன்** 2008 இல் **PTS** இன் கணக்காய்வுச் சேவைநாடுநராக **JPL** வந்ததிலிருந்து அதன் கணக்காய்வின் ஈடுபடுத்தல் பங்காளராக இருக்கிறார். கணக்காய்வுக் கூட்டத்தில், **JPL** ஆனது கணக்காய்வு மற்றும் கணக்காய்வு அல்லாத சேவைகள் ஊடாக கணக்காய்வு நிறுவனத்தின் வருமானத்தில் அண்ணளவாக 20% இனைப் பங்களிப்புச் செய்கின்ற, கணக்காய்வு நிறுவனத்தின் நீண்ட கால பிரதான சேவைநாடுநர் என **திரு. பீட்டர்சன்** குறிப்பிட்டிருந்தார். அவர் இந்தச் சேவைநாடுநருடன் விதிவிலக்கான வகையில் நல்ல நெருங்கிய தொடர்பினை பேணி வருவதாகவும் எந்த விலை கொடுத்தாலும் அதையே கணக்காய்வு அணியினரும் பேண வேண்டுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார். **திலினி** கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த ஈடுபடுத்தலின் தொடர்ச்சியான கணக்காய்வு முகாமையாளராக இருக்கிறார். **JPL** ஆனது தனது கம்பனியில் வெற்றிடமாகவுள்ள கணக்காளர் பதவியை **திலினி**க்கு வழங்க விருப்பம் தெரிவித்ததுடன் அதனை அவரும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

**JPL** இன் நிதிச் சொத்துக்களின் வலுவிழப்பை (Impairment) மீளாய்வு செய்வதற்கான ஈடுபடுத்தலுக்கு நீங்கள் நியமிக்கப்பட்டுள்ளீர்கள். இது தொடர்பான விளக்கங்களைப் பெற நிதி முகாமையாளருடன் நீங்கள் நடத்திய ஆரம்பக் கூட்டத்தில்,

''அது தொடர்பான வேலைகள் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்பதாலும் அவை அதிக கட்டணத்தில் ஒரு தனியான ஈடுபடுத்தலாக மேற்சொன்ன அணியினரால் தயாரிக்கப்படுவதாலும் சகல தேவையான விளக்கங்களையும் பெற்றுக் கொள்வதற்காக **PTS** நிதி ஆலோசனை அணியைத் தொடர்பு கொள்ளுமாறு தான் பரிந்துரைப்பதாக'' அவர் கூறியிருந்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) அடிப்படை ஒழுக்கநெறிக் கோட்பாடுகளுடன் இணங்குவதற்கான மூன்று (03) அச்சுறுத்தல்களை மேற்படி விடயங்களுடன் தொடர்புபடுத்தி **மதிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் இனங்காணப்பட்ட அச்சுறுத்தல்களைக் குறைப்பதற்கு **PTS** இனால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிறுவன ரீதியான பாதுகாப்பு ஏற்பாடுகள் நான்கினை (04) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

(A) ***வரையறுக்கப்பட்ட கிரவுண் (தனியார்) கம்பனி (கிரவுண்)*** என்பது 61 அறைகளைக் கொண்ட ஒரு மூன்று-நட்சத்திர ஹோட்டல் ஆகும். இந்தக் கம்பனியின் தலைவரான **திரு. நிஹால்,** 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தமது கம்பனியின் வருடாந்தக் கணக்காய்வை மேற்கொள்ளுமாறு உங்களுடைய கணக்காய்வு நிறுவனத்தைக் கோரியுள்ளார். கணக்காய்வாளரை மாற்றுவது தொடர்பில் முன்னைய கணக்காய்வாளர்களுடன் **திரு. நிஹால்** ஏற்கனவே கலந்துரையாடியிருப்பதுடன் முன்னைய ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளும் உங்களிடம் வழங்கப்பட்டுள்ளன.

கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக, கம்பனியானது இந்த ஆண்டில் ஆறு (06) மாதங்கள் மாத்திரமே இயக்கப்பட்டது. இருப்பினும், இயங்காத காலப்பகுதியில் குறைந்தளவான பராமரிப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

கீழ்வரும் வருமானக் கூற்று பொழிப்புகள் உங்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன: *(ரூபா '000)*

| **மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு** | **2022 (வரைவு)** | **2021 (கணக்காய்வு செய்யப்பட்டது)** | **2020 (கணக்காய்வு செய்யப்பட்டது)** |
|---|---|---|---|
| வருமானம் | 10,224 | 17,370 | 122,624 |
| விற்பனைக் கிரயம் | (8,970) | (14,650) | (70,122) |
| **மொத்த இலாபம்** | **1,254** | **2,720** | **52,502** |
| விநியோகச் செலவினங்கள் | (322) | (455) | (4,166) |
| நிருவாகச் செலவினங்கள் | (9,475) | (11,127) | (21,362) |
| நிதிச் செலவினங்கள் | (3165) | (3,422) | (3,070) |
| **வரிக்கு முன்னரான நிகர இலாபம் / (நட்டம்)** | **(11,708)** | **(12,284)** | **23,904** |
| வருமான வரிச் செலவினங்கள் | 0 | 0 | (1,060) |
| **நிகர இலாபம் / (நட்டம்)** | **(11,708)** | **(12,284)** | **22,844** |

ஆரம்பக் கலந்துரையாடலின்போது, **கிரவுண்** கம்பனியின் நிதி முகாமையாளர் 6 மாதங்களுக்கு முன்னர் பதவியிலிருந்து விலகியதாகவும் கணக்குகள் நிறைவேற்றுநரான **சமிலா** என்பவர் தொழிற்பாடுகளைக் கையாள்வதற்கான இயலுமையைக் கொண்டிருப்பதால் வெற்றிடமாகவுள்ள பதவி நிரப்பப்படவில்லை எனவும் **திரு. நிஹால்** தெரிவித்திருந்தார். மேலும், சில கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளும் ஆதரவு ஆவணங்களும் கம்பனியால் முறையாகப் பேணப்படவில்லை.

இந்தக் கணக்காய்வின் சிரேஷ்ட கணக்காய்வாளர் என்ற முறையில், **கிரவுண்** கம்பனியின் கணக்காய்வுக்கான ஒட்டுமொத்த கணக்காய்வுத் தந்திரோபாயத்தையும் அதன்பின் விரிவான கணக்காய்வுத் திட்டத்தையும் தயாரிக்க நீங்கள் தேவைப்படுத்தப்பட்டுள்ளீர்கள்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **வரையறுக்கப்பட்ட கிரவுண் (தனியார்) கம்பனியின்** ஒட்டுமொத்த கணக்காய்வுத் தந்திரோபாயத்தைத் தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஐந்து (05) விடயங்களை (matters) **இனங்காண்க.** (05 புள்ளிகள்)

(b) நிரந்தர கணக்காய்வுக் கோப்பினைப் பேணுவதற்கு நீங்கள் சேகரிக்க வேண்டிய **வரையறுக்கப்பட்ட கிரவுண் (தனியார்) கம்பனி** தொடர்பான ஐந்து (05) குறிப்பான ஆவணங்களை (specific documents) **நிரற்படுத்துக.** (05 புள்ளிகள்)

(c) கணக்காய்வாளர் ஒருவருக்கு பொருண்மை (materiality) ஏன் முக்கியமானது என்பதற்கான நான்கு (04) காரணங்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(d) கணக்காய்வு தொடர்பில் நீங்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய நான்கு (04) எழுத்து மூல பிரதிநிதித்துவங்களை (written representations) **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(B) **கிரவுண்** கம்பனியின் செலவின சரிபார்ப்பு தொடர்பான கனிஷ்ட அணி அங்கத்தவர்கள் இருவரின் கவலைகள் (concerns) கீழே நிரற்படுத்தப்பட்டுள்ளன :

- பொழுதுபோக்குச் செலவினங்களுடன் தொடர்புடைய பெரும்பாலான கொடுப்பனவுகளுக்கான கோரிக்கையின் பேரிலான சரிபார்ப்புக்கு விலை விபரப் பட்டியல்கள் போன்ற மூல ஆதரவு ஆவணங்கள் கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுடன் இணைக்கப்படவில்லை அல்லது கிடைக்கப் பெறவில்லை. இதனால் தொடர்புடைய கணக்காய்வுப் பணியைச் சரியாக பூரணப்படுத்த முடியவில்லை.
- 2022 மார்ச் மாதத்திற்கான, மின்சாரம், தொலைபேசி மற்றும் நீர்க் கட்டணப் பட்டியல்கள் கிடைக்கப்பெறவில்லை என்பதுடன் கடந்த மாதத்தின் உண்மையான கட்டணப் பட்டியல்களுக்குச் சமனான தொகைகள் அந்தந்த செலவினக் கணக்குகளுக்கு வரவுப் பதிவு (debited) செய்யப்பட்டுள்ளன.
- தளபாடம் மற்றும் உபகரணங்கள் மீதான தேய்மான அறவீடு 3 மாதங்களுக்குத் தவிர்க்கப் பட்டிருந்ததுடன் இது தொடர்பில் **சமிலா**வினால் சரியான விளக்கத்தை அளிக்க முடியவில்லை.

கனிஷ்ட அலுவலர்களின் மேற்படி கவலைகளைக் கவனத்தில் கொண்டு, ஆளுகை பாரப்படுத்தப் பட்டோருடனான கணக்காய்வாளரின் கலந்துரையாடல்களில் கனிஷ்ட அலுவலர்கள் கண்டறிந்த கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் பற்றி அறிக்கையிடப்பட வேண்டுமென நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) உள்ளகக் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் என்பதால் கருதப்படுவது யாதென **விபரிக்குக.**
(03 புள்ளிகள்)

(b) இரு கனிஷ்ட அலுவலர்களாலும் எழுப்பப்பட்ட கவலைகளை அடிப்படையாகக் கொண்டு, **கிரவுண்** கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளில் காணப்படும் மேற்படி குறைபாடுகளின் தாக்கத்தை **மதிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(A) **ஜாலியா** உங்கள் நண்பர்களில் ஒருவர், அவர் தனது குடும்பத்திற்குச் சொந்தமான வணிகமான **வரையறுக்கப்பட்ட ஜாலியா பற்றிக்ஸ் (தனியார்) கம்பனியில் (ஜாலியா பற்றிக்ஸ்)** 40% பங்குகளை வைத்திருக்கிறார். கடந்த ஆண்டில், தனது தந்தையின் தனியுடமை வியாபாரத்தை தனியார் கம்பனியொன்றாக மாற்றியதாக அவர் பெருமையுடன் உங்களிடம் தெரிவித்துள்ளார். மீதி 60% மான பங்கினை அவரது தந்தை வைத்திருப்பதுடன் கம்பனியின் தலைவராகவும் செயற்படுகிறார்.

**ஜாலியா,** வணிகத்தை விரிவாக்குவதற்குத் திட்டமிடுவதுடன் அவர் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு உங்களது ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறார். **ஜாலியா** தனது தற்போதைய வணிக நடவடிக்கைகள் தொடர்பாக வெளிப்படுத்திய மேலதிக தகவல்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன :

- அவரும் அவரது தந்தையும் வணிக நடவடிக்கைகளில், பிரதானமாக உற்பத்தி நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபடுகின்றனர்.
- 200 ஊழியர்கள் இருப்பதுடன் பதிவுகளைப் பேணுதல், சம்பளக் கொடுப்பனவுகள் மற்றும் கணக்கீட்டுத் தொழிற்பாடுகள் உள்ளிட்ட அனைத்து அலுவலக வேலைகளையும் கவனிப்பதற்காக 2 நிறைவேற்றுத்தர அலுவலர்களும் காணப்படுகின்றனர். பெரும்பாலான ஊழியர்கள் அவருடைய கிராமத்திலிருந்து வந்தவர்களாகவும் அவருடைய தந்தைக்கு நன்கு பரிச்சயமானவர்களாகவும் இருக்கின்றனர்.
- அவரது தந்தை ஒருமைப்பாடு மற்றும் ஒழுக்க விழுமியங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிப்பதுடன் ஊழியர்களிடையே அத்தகைய விழுமியங்களை வழிநடத்துகின்ற ஒரு முன்மாதிரி நபராக விளங்குகிறார். அத்துடன் கடினமாக உழைக்கின்ற ஆற்றல்மிகு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வையும் அவர்களுக்கான அங்கீகாரத்தையும் வழங்குகிறார். இருப்பினும், அவரது தந்தையின் நடைமுறை நம்பிக்கையின் அடிப்படையில் வேலை செய்வதாக இருக்கிறது. இதனால் பிரதான வணிக நடவடிக்கைகள் மீது எந்தவொரு முறைசார் செயன்முறையோ அல்லது கட்டுப்பாடோ அறிமுகப்படுத்தப்படவில்லை.
- தலைவர் நேரடியாக தொகையளவான கட்டளைகளைப் பெற்றுக்கொள்வதுடன் அவை முற்றிலும் அவரது நினைவாற்றலின் அடிப்படையில் வழங்கல் செய்யப்படுவதை உறுதி செய்கிறார்.
- **ஜாலியா** தனது தற்போதைய வணிகத்தின் தன்மை மற்றும் அளவைப் பூர்த்தி செய்வதற்கு, தற்போதுள்ள நிறுவனக் கட்டமைப்பு போதுமானதாக உள்ளது என நம்புகிறார்.
- எவ்வாறாயினும், பிரதான போட்டியாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விசேடமாக இணைய அடிப்படையிலான விற்பனை முறைமைகள் ஊடாக எப்போதும் வளர்ந்து வருகின்ற போட்டியின் காரணமாக தற்போது நடந்துகொண்டிருக்கின்ற வணிக விரிவாக்கச் செயற்பாடுகள் பற்றி அவர் சந்தேகிக்கிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) மேற்படி விடயங்களின் அடிப்படையில் ***ஜாலியா பற்றிக்ஸ்*** கம்பனியில் பலவீனமாக காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் (COSO வேலைச்சட்டகத்தின்படி) கூறுகளை (elements) **ஏற்பிசைவு செய்க.** (05 புள்ளிகள்)

(b) ***ஜாலியா பற்றிக்ஸ்*** கம்பனிக்கு ஒரு வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஏன் முக்கியமானது என்பதற்கான இரண்டு (02) காரணங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றின் இரண்டு (02) உள்ளார்ந்த வரையறைகளை (inherent limitations) **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(B) உங்களிடமிருந்து சில செயன்முறை மேம்பாட்டு வழிகாட்டல்களை எதிர்பார்த்து, காசு முகாமைத்துவச் செயன்முறை தொடர்பான கீழ்வரும் விடயங்களை ***ஜாலியா*** குறிப்பிட்டுள்ளார்.

- சில்லறை விற்பனை அல்லது மொத்த விற்பனை தொடர்பான காசும் காசோலைகளும் இரண்டு நிறைவேற்றுத்தர அலுவலர்களில் ஒருவரால் சேகரிக்கப்படுகின்றன. அந்த அனைத்து விற்பனைகளும் தொழிற்சாலைக்கு அருகிலுள்ள கம்பனியின் பிரதான களஞ்சியத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.
- அவரது தந்தையாரின் வழிகாட்டலைப் பின்பற்றி, பெறப்படும் காசுத் தொகைகள் பொதுவாக காசேடு ஒன்றில் குறிப்பிடப்படுவதுடன், சேகரிக்கப்படுகின்ற காசோலைகள், நிறைவேற்றுத்தர அலுவலர் ஒருவரால் வங்கியில் வைப்புச் செய்யப்படும் வரை அலுமாரி இழுப்பறை ஒன்றில் வெறுமனே பேணப்படுகின்றன.
- விற்பனைகளின் மூலம் சேகரிக்கப்படுகின்ற காசு, நாளாந்த செலவினங்களுக்குப் பயன்படுத்தப் படுவதுடன் மீதிக் காசானது வழமையாக காசோலைகளுடன் சேர்த்து வார இறுதியில் வங்கியில் வைப்புச் செய்யப்படுகிறது.
- தரப்பட்ட எந்தவொரு நிலையிலும் (point), கம்பனியானது கையிலோ அல்லது சேமிப்புக் கணக்குகளிலோ தொழிற்பாட்டுச் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட கணிசமானளவு காசுச் சேகரிப்புகளைக் கொண்டுள்ளது.
- வைப்புச் செய்யப்பட்ட காசோலைகளினது தேறுகையில் காணப்படும் தாமதங்கள் மற்றும் வங்கிக் கூற்றுகளைப் பெறுவது தொடர்பில் நிறைவேற்று அலுவலர்கள் மேலதிக எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காமை ஆகிய காரணங்களால் வங்கிக் கணக்கு மீதியானது காசேட்டு மீதியுடன் எப்போதும் இணக்கமானதாக இருக்காது.

மேலும், ***ஜாலியா பற்றிக்ஸ்*** கம்பனியின் பிரதான செயன்முறைகளை கணினிமயப்படுத்துவதற்கான ஆரம்பப் படிமுறை ஒன்றாக பொதுப் பேரேடு, தொக்கு மற்றும் கடன்கொடுத்தோர் என்ற மூன்று தொகுதிகளுடன் வடிவமைக்கப்பட்ட முறைமையொன்றை நடைமுறைப்படுத்த ***ஜாலியா*** விரும்புகிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ***ஜாலியா பெற்றிக்ஸ்*** இன் மேற்படி காசு முகாமைத்துவச் செயன்முறையில் உள்ள ஐந்து (05) உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்களை **இனங்காண்க.** (05 புள்ளிகள்)

(b) மேற்படி ஒவ்வொரு பலவீனங்களையும் சமாளிப்பதற்கான (overcome) ஒவ்வொரு பரிந்துரை (recommendation) வீதம் **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(c) மேற்படி தகவல் முறைமைகளை நடைமுறைப்படுத்துகையில் ***ஜாலியா*** கவனத்திற் கொள்ளக்கூடிய பொது IT கட்டுப்பாடுகள் இரண்டினை (02) ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணத்துடன் **நிரற்படுத்துக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |